சுபீட்சம்
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
வெள்ளிக்கிழமை 18.05.2021 supeedsam.com supeedsam@gmail.com

A.Puwanesh
Y.RAJ GOLDSCHMUCK
SPECIALIST IN JEWELLS MAKING & REPAIRING
Tel & Fax : 071 298 17 29
Handy : 079 590 91 98
Bruggwaldstasse 112 9300 Wittenbach Switzerland

# 13 க்கு உயிர் கொடுக்கப்படும்
## கூட்டமைப்பிடம் இந்திய தூதுவர் உறுதி



(கொழும்பு செய்தியாளர்)

13ஆவது திருத்தத்துக்கு அமைவாகவும் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் இலங்கையின் நல்லிணக்கத்துக்கு இந்தியாவின் நிலையான ஆதரவினை உயர்ஸ்தானிகர் நேற்று இந்திய இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பில் உறுதிப்படுத்தியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தலைமையில் தமிழ் தேசிய

02 ஆம் பக்கத்தில்...

## பயணக் கட்டுப்பாடு நீடிப்பதா? இல்லையா? இன்று முடிவு



(ராஜ்)

தற்போது அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாட்டை ஜுன் 21 ஆம் திகதி தளர்த்துவதா? இல்லையா? என்பது குறித்து இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என்று கொவிட் தடுப்புச் செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில் நேற்று திடீர் அதிகரிப்பு 176 பேருக்கு தோற்று: 3 பேர் மரணம்



(முர்ஷித்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை 176 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ள அதேவேளை,மூவர் மரணமடைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட

02 ஆம் பக்கத்தில்...

## ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் பிரதமர் மோடியிடம் வலியுறுத்திய தமிழக முதல்வர்



ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் மற்றும் கச்சத்தீவை மீட்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை இந்திய பிரதமர் நரேந்திர மோடியிடம் தமிழக

02 ஆம் பக்கத்தில்...

## பெரியகல்லாறு பிரிவின் சில பகுதிகள் முடக்கம்

(மட்டுநிருபர்)

மட்டக்களப்பு,களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு பகுதியில் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன.

02 ஆம் பக்கத்தில்...

## ஓட்டமாவடியில் 612 உடல்கள் நல்லடக்கம்

(குகதர்சன்)

கொரோனா தொற்றின் காரணமாக மரணமடைந்த உடல்களை அடக்கம் செய்யும் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா நகரில் அமைந்துள்ள கொரோனா

02 ஆம் பக்கத்தில்...

## களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் கோரோனா பரிசோதனைக்கு தாதியர்கள் மறுப்பு
### வைத்தியர்கள் சம்மதம்



(ரக்ஸனா)

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் தாதியர்கள் பி.சி.ஆர், மற்றும் அண்டிஜன் பரிசோதனை செய்வதற்கு மறுப்பு தெரிவித்ததையடுத்து வைத்தியர்கள் முன்வந்து பரிசோதனையில் நேற்று ஈடுபட்டனர்.

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் தாதியர்கள்

02 ஆம் பக்கத்தில்...

MULTI CONSULTING
Versicherung & Finanz
சமூக அக்கறை எமது இலக்கு
வருமான வரிப்படிவம் நிரப்புதல் 60 CHF மட்டுமே
Im Rietpark 5 ,8180 Bülach, Zürich, Switzerland
info@multiconsulting.ch
079 765 50 57 www.multiconsulting.ch

## குழந்தைகளை தாக்கும் புதிய நோய்
### இலங்கையர்களுக்கு எச்சரிக்கை



இலங்கையில் தற்போது பூனை மற்றும் நாய்கள் மூலம் சிறுவர்களுக்கு புதிய நோய் தொற்றுவதாக லேடி ரிட்ஜ்வே குழந்தைகள் மருத்துவமனையின் நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

டோக்ஸோகாரியாசிஸ் (toxocariasis) என அந்த நோய்க்கு பெயர் வைக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமூகத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206

கடன்பெறுவது, வீடு வாங்குவது சம்பந்தமான ஆலோசனைகள் தேவையெனில் எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்.
வங்கிக்கடன் பெற்றுக்கொடுப்பதில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம்.
சுவிசில் உள்ள பிரபலமான கடன் வழங்கும் வங்கிகளின் நேரடி அங்கீகாரம் பெற்ற நேர்மையான ஒரே நிறுவனம்
நீங்கள் 5 வருடங்களுக்கு முன்பு வீடு வாங்கியிருந்தால் குறிப்பிட்ட வீட்டை வைத்து கடன் பெறலாம். அல்லது இன்னொரு வீடுவாங்குவதற்கு முதலீடு செய்யலாம்.
Kamal GmbH
Kamal Kredit & Hypothek
Kamal Kredit Hypothek
Zürcherstrasse 47b, 8426 Lufingen
043 3335971, 079 6502 615
swisssenthu@hotmail.com

## கடலுக்குச் சென்று காணாமல் போனவர்களின் குடும்பத்தை நேரில் சந்தித்தார் கிழக்கு ஆளுனர்



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை பகுதியை சேர்ந்தவர்கள் மூவர் அண்மையில் மீன்பிடிக்கச் சென்று கடலில் காணாமல் போனவர்களின் குடும்பங்களை கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத்

02 ஆம் பக்கத்தில்...

"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"
aaDaa Finance 0798000100
Aadaa Finance GmbH
Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO
Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302
Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland
079 8000 100
arulnages@yahoo.com
finma 34598 25605: Cicero

SAYENTHIRAN KATHIR
Geschäftsführer
S TRAVEL
Flugtickets | Hotels | Reiseversicherungen
Luisenstr 21 8005 Zurich info@stravel.ch www.stravel.ch
044 419 91 00 079 913 77 59

## அக்கறையற்ற அரசியல் வாதிகள் சிலர் மணல் கோள்ளையர்களுக்கு உதவி
### சாணக்கியன் காட்டம்

அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்களின் வயிற்றில் அடிக்கும் மணல் கொள்ளையர்களுக்கு சில அரசியல்வாதிகள் உதவி செய்து வருகின்றனர்.

02 ஆம் பக்கத்தில்...

# மட்டு.மாவட்டத்தில் 13 ஆயிரம் ஏக்கரில் மரமுந்திரிகை செய்கை: 50 வீதம் பாதிப்பு

(ரீ.எல்.ஜவ்பர்கான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 13 ஆயிரம் ஏக்கர் நிலப்பிரப்பில் மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டதாக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன தோட்டப் பிரிவு பொறுப்பாளர் தெரிவித்தார்.கிரான் ஆரையம்பதி வாகரை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் அதிகளவில மரமுந்திரிகை செய்கை பண்ணப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் மரமுந்திரிகை அறுவடை ஆரம்பித்துள்ள போதிலும் 50 சதவீத செய்கை இம்முறை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

காலநிலையில் திடீரென ஏற்பட்ட மாற்றம், கொரோனா, அதிக வெப்பம் என்பவே உற்பத்தி வீழ்ச்சிக்கான காரணம் எனவும் கூறிய பூக்கும் காலப்பகுதியில் அதிகமான பூக்கள் கடுமையான வெப்பத்தினால் கருகி உற்பத்தி பாதிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதனால் மரமுந்திரிகை விதைகளின் விலைகள் பெருமளவு அதிகரிக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.தற்போது 1 கிலோ மரமுந்திரிகை விதை 3500 ரூபாய் முதல் 4000 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மரமுந்திரிகை அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் மரமுந்திரிகைப் பழங்கள் நடமாடும் வியாபாரிகள் மூலம் மாவட்டமெங்கும் விற்பனை செய்யப்பட்டு வகின்றன.



# குழந்தைகளை தாக்கும் புதிய நோய்

கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக பாடசாலை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதனால் பூனைகள் மற்றும் நாய்க்குட்டிகளுடன் சிறுவர்கள் வீட்டில் அதிக நேரம் செலவிடுகிறார்கள்.

பெரும்பாலும் பூனைகள் மற்றும் நாய்க்குட்டிகள் போன்ற சிறிய விலங்குகளின் உடலில் இந்த நோய் உருவாகின்றது. இந்த விலங்குகளுடன் தொடர்பை பேணும் சிறுவர்களுக்கு ஆரம்ப கட்டத்தில் தோலில் புழுக்கள் ஏற்படும் என்றும் கூறினார்.

பின்னர் அந்த புழுக்கள் குழந்தைகளின் கண்கள், மூளை மற்றும் நுரையீரலுக்குள் நுழைந்து கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தக்கூடும் என்றும், கடந்த சில நாட்களாக இந்த நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் ஒரு குழுவை அவர் சந்தித்ததாகவும் நிபுணர் கூறினார்.

இது போன்ற வீட்டு விலங்குகளுக்கு மருந்து கொடுப்பதன் மூலம் நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

# கடலுக்குச் சென்று காணாமல் போனவர்களின்

அவர்கள் நேரில் சென்று நேற்று சந்தித்து ஆறுதலும் நம்பிக்கையும் தெரிவித்ததோடு உலர் உணவுப் பொருட்களையும் வழங்கி வைத்தார். கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ஜெ.ஜெனார்தனன் அவர்களும் இதன்போது விஜயம் செய்தார்.

காணாமல் போனவர்களை கண்டுபிடிக்க எங்களால் முடிந்த முயற்சிகளை செய்வதோடு அவர்கள் விரைவில் கிடைக்க இறைவனை பிரார்த்திப்பதாகவும் உறவினர்களிடம் தெரிவித்தார்.

இதன்போது மீனவ சங்கத்தலைவர், செயலாளர் மற்றும் திருகோணமலை நகரசபை உப தலைவர் கோகுல்ராஜ் அவர்களும் உடனிருந்தனர்.

# மட்டக்களப்பில் நேற்று திடீர் அதிகரிப்பு; 176 பேருக்கு தொற்று;

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நா.மயூரன் தெரிவித்தார்.

கொரோனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காத்தான்குடி பிரதேசத்தில் ஒருவரும், ஏறாவூர் பிரதேசத்தில் ஒருவரும்,கோறளைப்பற்று மத்தியில் ஒருவர் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளர்.

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 22, களுவாஞ்சிகுடி 26,வாழைச்சேனை 1,காத்தன்குடி 36,ஓட்டமாவடி 23,கோறளைப்பற்று மத்தி 06,ஏறாவூர் 48,பட்டிப்பளை 05,வெல்லாவெளி 01,ஆரையம்பதி 04 என பதிவாகியுள்ளதுடன், பொலிஸார் இருவருக்கும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் 20 பேருக்கும் என தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# அக்கறையற்ற அரசியல்வாதிகள் சிலர் மணல்

இவர்களின் இவ்வாறான செயற்பாடுகளினால் எமது மக்களே பாதிக்கப்படுகின்றனர் என்பதை அவர்கள் மறந்து செயற்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

செங்கலடி பிரதேச சபையின் தவிசாளர், கித்துள் பிரதேச சபை உறுப்பினர்களான வர்ணன், சிவானந்தன் மற்றும் ஊர்மக்களை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது குறித்த பகுதி மக்களினால் மணல் லொறிகள் இந்த வீதி ஊடாக பயணிப்பதை நிறுத்துமாறு கோரி மனு ஒன்றும் இரா.சாணக்கியனிடம் கையளிக்கப்பட்டது.

இதுகுறித்து மாவட்ட அரசாங்க அதிபருடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கித்துள் பகுதியில் பயணத்தடை காலத்திலும் முன்னெடுக்கப்பட்டுள்ள சட்ட விரோத மண் அகழ்வுகள் காரணமாக மீனவர்கள் மற்றும் விவசாயிகள் பெரும் கஸ்டங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

கித்துள் பகுதியில் வடிச்சல் ஆற்றை ஊடறுத்து உழவு இயந்திரம் மற்றும் கனரக வாகனங்கள் மூலம் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் தமது மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்து கித்துள் வடிச்சல் ஆற்றுப்பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்ப்பு நடிவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 30 மீனவர்கள் விவசாயிகள் குறித்த ஆற்றுப்பகுதியில் சமூக இடைவெளியைப் பேணி தமது எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குறித்த ஆற்றை ஊடறுத்து இரவு பகலாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனால் தாம் தொழிலுக்கு ஆற்றைக் கடந்து செல்ல பெரிதும் சிரமப்படுவதாகவும் ஆற்றுப்பகுதி ஆழமாகி செல்வதாகவும் தெரிவிக்கும் மீனவர்கள் தாம் செல்லும் வீதியும் நாசமாகியுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் தாங்கள் மண் அகழ்வில் ஈடுபடுவோரிடம் ஏதும் கேட்டால் அவர்கள் தங்களை தாக்குவதாகவும் மீனவர்கள் கவலை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், கடந்த மூன்று வருடங்களாக இந்த பிரச்சினையை எதிர்நோக்கிவருவதாகவும் மீனவர்கள்,விவசாயிகள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தநிலையிலேயே இரா.சாணக்கியன் குறித்த பகுதிக்கு சென்று மக்களுடன் பேசியிருந்தார் என்பதுக் குறிப்பிடத்தக்கது.




# ஓட்டமாவடியில் 612 உடல்கள் நல்லடக்கம்

மைய வாடியில் கடந்த புதன்கிழமை மாலை வரை 649 உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக ஓட்டமாவடி பிரதேச சபை செயலாளர் எஸ்.எம்.சிஹாப்தீன் தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மஜ்மா நகரில்ᄀᄀ அமைந்துள்ள கொரோனா மைய வாடியில் நேற்று 16.06.2021 வரை 612 முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் அடக்கப்பட்டுள்ளதுடன்; 15 இந்து உடல்களும், 14 கிறிஸ்தவ உடல்களும்; 06 பௌத்த உடல்களும், 02 வெளிநாட்டவர்களின் உடல்களுமாக மொத்தம் 612 உடல்கள் அடக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார்.

# களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் கொரோனா

அங்கு வரும் நோயாளர்களுக்கு பி.சி.ஆர், மற்றும் அண்டிஜன் பரிசோதனை செய்வதற்கு மறுப்பு தெரிவித்து வருவதையடுத்து, அவ்வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கே.புவனேந்திரநாதன் அவர்களின் தலைமையில் அங்கு கடமைபுரியும் வைத்தியர்கள் வியாழக்கிழமை(17) முன்வந்து பரிசோதனையில் ஈடுபட்டனர்.

பி.சி.ஆர் செய்வதற்கு ஆட்கள் போதாமையினால்தான் இன்று நான் முன்வந்து வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகளுக்கு இந்த பி.சி.ஆர் பரிசோதனையை முன்னெடுத்துள்ளேன். இப்பகுதியில் 180000 மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள், இப்பகுதியில் எம்மாலான சேவையை மேற்கொண்டு வருகின்றோம். இந்நிலையில் வைத்தியதிசாலைக்கு வரும் நோயளர்களை பரிசோதனை செய்து உள்ளே எடுத்தால்தான் ஏனையவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாக்க முடியும். இதனை நாம் செய்யாமல் விட்டால் எமது உத்தியோகஸ்தர்களுக்கும் ஏனை பொதுமக்களுக்கும் தொற்று பரவி நிலமை மோசமாகிவிடும்.

எமது வைத்தியசாலையில் உள்ள 18 வைத்தியர்களும், 24 மணி நேரமும் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள். அத்துடன் சேர்த்து, சுழற்சிமுறையில் இந்த பரிசோதனைக் கடமையில் ஈடுபட்டு வருகின்றோம். இதனால் நோயாளிகளையும், ஏனைய பொதுமக்களையும் பாதுகாக்க முடியும். இதில் யாரையும் சிரமத்திற்குட்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கமும் இதில் கிடையாது.

வைத்தியசாலையிலுள்ள அனைவரும் ஒத்துழைப்பு வழங்கினால்தான் மக்களுக்கு முழுமையான சேவையை வழங்க முடியும். அரசாங்கத்தின் உதவியுடன் எமது மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்குரிய அனைத்து சேவைகளையும் நாம் செய்து வருகின்றோம்.

தாதிய உத்தியோகஸ்த்தர்கள் ஏன் இந்த பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனையில் ஈடுபடுவதை தவிர்த்து வருகின்றார்கள் என கேட்டபோது. அது தொடர்பில் அவர்களிடம்தான் கேட்கவேண்டும். எனினும் அவர்களைச் சாடவேண்டும் என்ற எதுவித தனிப்பட்ட உள்நோக்கமும் கிடையாது. அவர்களின் சொந்த பிரச்சனையில் நான் தலையீடு செய்யவில்லை. இவ்வாறு பிசி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனை செய்யவில்லை என்றால் இன்னும் கொரோனா எமது வைத்தியர்கள், மற்றும் ஏனைய உத்தியோகஸ்த்தர்கள், பொதுமக்களுக்கும் பரவியிருக்கும் .கடந்த வாரம் இவ்வைத்தியசாலைக்கு நோயாளர்களாக வந்தவர்களுள் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜயன் பரிசோதனையில் 38 பேருக்கு பொசிற்றீவ் ஆக வந்துள்ளது. இதனை நாம் செய்யாமல் விடமுடியாது என களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் கே.புவனேந்திரநாதன் இதன்போது ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.




# பெரியகல்லாறு பிரிவின் சில பகுதிகள் முடக்கம்

பெரியகல்லாறு மூன்றாம் இரண்டாம் வட்டார பிரிவுகளின் பல பகுதிகள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் 43 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையில் குறித்த பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது கொரோனா தொற்று உறுதியானவர்களின் குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்பானவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் பயணத்தடையினை அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் அதனை மீறும் வகையில் மக்கள் செயற்படுவதன் காரணமாக தொற்று அதிகரித்துச் செல்லும் நிலையுருவாகியுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

# பயணக் கட்டுப்பாடு நீடிப்பதா? இல்லையா?; இன்று முடிவு

ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து இன்று ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள கொவிட் தடுப்புச் செயலணிக் கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி கூறியுள்ளார்.

மே 21 ஆம் திகதி நாடு முழுவதும் அமுல்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாட்டை ஜுன் 21 ஆம் திகதி அதிகாலை 4 மணியுடன் தளர்த்துவதற்கு கடந்த வாரத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில், பயணக் கட்டுப்பாட்டை இப்போதைக்கு தளர்த்த வேண்டாம் என்று விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எனினும் இதுகுறித்து இதுவரையில் முடிவெடுக்கவில்லை. நாட்டின் கொவிட் தொற்றுப் பரவல் நிலைமை குறித்து மீளாய்வு செய்த பின்னரே முடிவெடுக்கப்படும் என்றும், இதன்படி நாளை காலை கூடும் செயலணிக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

# ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும்; பிரதமர் மோடியிடம்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்வைத்துள்ளார். தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றபின் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடியை முதன்முறையாக நேற்று மாலை சந்தித்தார். சுமார் 25 நிமிடம் இந்த சந்திப்பு நடந்தது. பின்னர் தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமரிடம் அவர் அளித்தார்.

சந்திப்புக்குப் பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அளித்த பேட்டியின்போது கூறியதாவது:

பதவியேற்ற உடனேயே கொரோனா பணிகள் இருந்ததால், பிரதமரை சந்திக்க முடியவில்லை. இப்போது அவர் ஒதுக்கி கொடுத்த நேரத்தில் சந்தித்தேன். பிரதமர் வாழ்த்துகளை சொன்னார். தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பு வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் தமிழகத்தின் கோரிக்கைகள் குறித்த மனுவை அளித்தேன்.

தமிழகத்துக்கு கூடுதல் தடுப்பூசி வழங்க வேண்டும், செங்கல்பட்டில் தடுப்பூசி உற்பத்தி மையத்தை உடனடியாக பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும், திருக்குளைத் தேசிய நூலாக அறிவிக்க வேண்டும், நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும், கச்சத்தீவை மீட்க வேண்டும், வேளாண் சட்டங்களைத் திரும்ப பெற வேண்டும், சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்ற வேண்டும், சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக ஆக்க வேண்டும்,

மேகதாது திட்டத்திற்கு தடைவிதிக்க வேண்டும், நாடாளுமன்றம், சட்டமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும். புதிய மின்சார சட்டத்தை ரத்து செய்ய வேண்டும், இட ஒதுக்கீட்டை நிர்ணயிக்கும் உரிமை மாநில அரசுகளுக்கே வழங்கவேண்டும்

மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான பணிகளை விரைந்து தொடங்க வேண்டும், கோவையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க வேண்டும். ஈழ அகதிகளுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினேன். அமைச்சர்களுடன் ஆலோசித்து நிறைவேற்றுவதாக பிரதமர் உறுதியளித்தார். பிரதமருடனான சந்திப்பு மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறினார்.




# 13 க்கு உயிர் கொடுக்கப்படும் கூட்டமைப்பிடம்; இந்திய தூதுவர் உறுதி

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் ஐந்து பேரடங்கிய குழுவினர் இந்திய உயர் ஸ்தானிகரை சந்தித்து கலந்துயையாடியுள்ளனர்.

இதன் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு கிழக்கு உட்பட இலங்கையின் அபிவிருத்தி, அதிகாரப் பகிர்வு குறித்து இச்சந்திப்பில் பேசப்பட்டுள்ளது.

13ஆவது திருத்தத்துக்கு அமைவாகவும் ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்புக்குள்ளும் சமத்துவம், நீதி, சமாதானம் மற்றும் கௌரவம் ஆகியவற்றுக்கான தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் இலங்கையின் நல்லிணக்கத்துக்கு இந்தியாவின் நிலையான ஆதரவினை உயர் ஸ்தானிகர் இச்சந்திப்பில் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் மற்றும் சுமந்திரன் எம்.பி. ஆகியோரும் சந்திப்பில் பங்கேற்றனர்.


SwissLife
Select
சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.
உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...
மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி
Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.
Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65


Sj
SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்
பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்
வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.
திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.
+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch


Aaran Ayurveda
& Wellness Massage
Weinberg Strasse - 22, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | 077 982 1291 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt


உதயகுமார் கல்வி நிலையம்
முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com


SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28
வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்
10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க
இருக்கும் வீட்டை வைத்து
இன்னொரு வீட்டை வாங்க...
வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
வீடு வாங்குவதற்கான
ஆயுட்காப்புறுதி
Architect வேலைகள்
இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த
இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.
» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி


MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைத்தும்
பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும்
நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில்
எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை
எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

# மருதமடு ஆடி பெருவிழாவில் ஆறு திருப்பலிகள் ஒப்புக்கொடுக்க ஏற்பாடு

(வாஸ் கூஞ்ஞ)

இலங்கையில் கொரோனா தொற்று நோயின் இக்கட்டான சூழ் நிலையிலும் சுகாதார நடைமுறைகளுக்கேற்ப மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னையின் ஆடி மாத பெருவிழா கொண்டாடப்பட இருக்கின்றது.

வெளி மாவட்டவர்கள் கலந்துகொள்ள தவிர்க்கப்பட்டுள்ள நிலையில் திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட மறைக்கோட்டங்களுக்கு தலா இரண்டு திருப்பலிகள் வீதம் நடாத்தி குறிப்பிட்ட தொகையினர் கலந்துகொள்ள ஒத்துழைப்பு நல்கிய யாவருக்கும் நன்றி தெரிவிப்பதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இவ்வாறு தெரிவித்தார்.

புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் ஆடி மாத மருதமடு அன்னை பெருவிழாவுக்கான எற்பாடு கூட்டம் நடைபெற்றது.

இதன் போது மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை இங்கு தெரிவிக்கையில்

இம் மாதம் 23 ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2ந் திகதி நிறைவுபெற இருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு ஆலய ஆடி மாத பெருவிழா வைப்பற்றி கடந்த கூட்டத்தில் நாம் ஆராய்ந்திருந்தோம்.

நடைமுறையில் இருக்கும் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப இவ் விழாவை கொண்டாடுவது என நாம் தீர்மானித்திருந்தோம். வெளி மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் இவ் விழாவில் கலந்துகொள்ள முடியாது எனவும் இவை சம்பந்தமாக ஊடகங்கள் மூலம் நேரகாலத்துடன் தெரிவிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



கடந்த கூட்டத்தில் கலந்தாலோசித்தபோது பல திருப்பலிகள் ஒப்புக்கொடுக்க முடியும் எனவும் ஆனால் ஒரு திருப்பலியில் ஆகக்கூடியது முப்பது பேர் மட்டுமே கலந்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ் திருப்பலிகளை ஆலயத்தின் முன்றலிலேயே வைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. திருவிழா திருப்பலி ஆடி மாதம் 02ந் திகதி காலை 6.15 க்கு நடைபெறும். இவ் திருப்பலி தமிழ், சிங்களம் மற்றும் திருச்சபையாம் தாய் மொழி லத்தீன் மொழியிலும் வழமை போன்று இடம் பெறும். அத்துடன் திருச்சுரூப ஆசீரும் வழங்கப்படும்.

இதைத் தொடர்ந்து ஆறு திருப்பலிகள் இடம்பெறும். இவைகள் மன்னார் மறைமாவட்டத்திலுள்ள ஒவ்வொரு மறைகோட்டங்களிலிருந்தும் முப்பது பேர் கலந்துகொள்ளும் விதமாக அவர்களுக்கென தனித்தனி திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவைகள் காலை 8 மணி, 9 மணி, 10 மணி, 11 மணி நண்பகல் 12 மணி மற்றும் பிற்பகல் 3 மணி ஆகிய நேர சூசியின்படி ஒவ்வொரு மறைகோட்டங்களுக்கும் தலா இரண்டு திருப்பலிகள் மறைகோட்ட பக்தர்கள் கலந்துகொள்ளும் திருப்பலிகளாக இடம்பெறும். அதுவும் சுகாதார நடைமுறைகளுக்கேற்ப தலா முப்பது நபர்கள் மட்டுமே கலந்துகொள்ள முடியும்.

இவ் திருப்பலிகளில் கலந்துகொள்வோரின் பெயர் விபரங்கள் மறைக்கோட்ட ரீதியாக தனித்தனியே வழங்கப்படும். நேரடியாக திருவிழாத் திருப்பலியில் கலந்துகொள்ள முடியாத மக்களுக்காக இவ் திருவிழாத் திருப்பலியில் கலந்துகொள்ளும் விதமாக தொலைக்காட்சி மற்றும் கத்தோலிக்க தொலைக்காட்சியூடாகவும் பங்குபற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது விடயமாக இலங்கையின் அனைத்து மறைமாவட்ட ஆயர்களுக்கும் நாங்கள் தெரியப்படுத்தியுள்ளோம். பக்தர்கள் மட்டுமல்ல அருட்பணியாளர்கள் மற்றும் துறவறத்தை சார்ந்தோர்களையும் கலந்து கொள்வதில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான கட்டுப்பாட்டுக்குள்ளேயே நாம் இவ் திருவிழாவை கொண்டாட இருக்கின்றோம். 23 ந் திகதி இவ் விழாவை முன்னிட்டு ஏற்றப்படும் கொடியேற்றத்துடன் திருவிழா வரை பிற்பகல் 6 மணிக்கு நவநாட்களும் திருவிழாவுக்கு முதல் நாள் நற்கருணை ஆசீர்வாதமும் வழமைபோன்று இடம்பெறும்.

இவ் விழா காலங்களில் நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா தொற்று நோய் அகன்று மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையில் நலத்துடன் வாழ மருதமடு அன்னையிடம் நாம் வேண்டி நிற்போம்.

இக்கட்டான சூழ் நிலையிலும் இவ் விழாவை கொண்டாடுவதற்கு மருதமடு அன்னை அருள்பாலித்திருப்பதற்கும் இதற்காக ஒத்துழைப்பு வழங்கி வரும் ஒவ்வொரு நல் உள்ளங்களுக்கும் நான் நன்றி கூறி நிற்கின்றேன் என்றார்.

# தனிமைப்படுத்தப்பட்ட கிராம மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கிவைப்பு



(நடேசன் குகதர்ஷன்)



கொரோனா தொற்று அதிகரிப்பு காரணமாக தனிமைப்படுத்தப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உலர் உணவு பொதிகள் நாடளாவிய ரீதியில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் தனிமைப் படத்தப்பட்ட மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவு, மீராவோடை கிழக்கு மற்றும், மீராவோடை மேற்கு ஆகிய மூன்று கிராம சேவகர் பிரிவுகளுக்குமான உலர் உணவு பொதிகள் வழங்கும் வேலைத்திட்டம் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜாவின் வழிகாட்டலில் இடம் பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் மாஞ்சோலை கிராம சேவகர் பிரிவில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் தவிர்ந்த 1211 குடும்பங்களுக்கு அரிசி, பால்மா, கோதுமை, சீனி, நூடில்ஸ் அடங்கலான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதியில் முதற்கட்டமாக ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

குறித்த உலருணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வீடு வீடாகச் சென்று உலர் உணவு பொதிகளை வழங்கி வருகின்றனர்.

# கிழக்கு மாகாண ஆளுநர் தீ விபத்தில் சேதமடைந்த வீட்டுக்குச் சென்று உதவி



(இஃஜாஸ் - ஏ - பரீட்)

திருகோணமலை கோமரங்கடவெல பகுதியில் தீ விபத்தில் சேதமடைந்த பக்மிகாமாவில் வசிக்கும்



டி சாந்தி குமாரி தயரத்னாவின் வீட்டை பழுதுபார்ப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் நேரடியாக சென்று பார்வையிட்டு நன்கொடை அளித்தார்.

மாகாண வீட்டுவசதி மேம்பாட்டு உதவியுடன் அதிகாரம். தீ விபத்தில் வீடுகள் சேதமடைந்துள்ள குடும்பத்தைக் காண ஆளுநர் அதே நாளில் அங்கு சென்றார்.

இத் தீ விபத்தில் சிக்கிய வீட்டை சரி செய்ய ஆளுநர் பணத்தையும் வழங்கினார். மேலும், குடும்பத்தின். பிள்ளைகளின் கல்விக்கான பாடசாலை உபகரணங்களையும் ஆளுநர் நன்கொடையாக வழங்கினார்.

# கல்முனை பிராந்தியத்தில் போதைப்பொருளை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

## எச்.எம்.எம் ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனைப் பிராந்தியத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இன்னும் தீவிரப்படுத்தப்படும் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக நேற்று வியாழக்கிழமை அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது;

அம்பாறை மாவட்டத்தில் போதைப்பொருள் வியாபாரங்களும் பாவனையும் அதிகரித்திருப்பது தொடர்பாக நான் ஏற்கனவே ஜனாதிபதியின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தேன். அதைத் தொடர்ந்து அவர் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு பணிப்புரை விடுத்ததன் பேரில் சம்மந்தப்பட்ட நபர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கிறது.

இருந்தும் முற்றுமுழுதாக போதைப்பொருள் வியாபாரங்களும் பாவனையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை என்ற அதிருப்தி மக்கள் மத்தியில் காணப்படுகின்றது.

இது சம்மந்தமாக பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட முக்கிய பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருக்கிறேன். இதன்போது சில வியாபாரிகள் இப்பிரதேசத்தை விட்டு தற்காலிகமாக மறைந்திருப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது. இருந்தபோதிலும் இவ்விடயம் தொடர்பாக புலனாய்வுப் பிரிவினரை அதிகளவில் ஈடுபடுத்தி, சம்மந்தப்பட்டோரை வளைத்துப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளேன்.

பொதுவாக அம்பாறை மாவட்டத்தில் போதைப்பொருள் வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி, எமது பகுதியில் இருந்து அதனை முற்றாக ஒழித்து, எமது இளம் சந்ததியினரை பாதுகாப்பதற்காக நான் உட்பட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தீவிரமாக செயற்பட்டு வருகின்றோம்- என்றார்.

# சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தலைவரின் தொடரும் மனித நேயப் பணிகள்





சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் மட்டக்களப்பு மாவட்ட தலைவரும்,பிரபல சமூக சேவையாளரும், மனித நேய செயற்பாட்டாளரும், கல்லடி சிவானந்தா வித்தியாலயத்தின் பழைய மாணவனுமான தேசமானி அல்ஹாஜ் ALM. மீரா சாஹிபு jp அவர்களின் மற்றுமொரு பணி நேற்று மட்டக்களப்பு பூநொச்சிமுனை தமிழ் எல்லை கிராமத்தில் வதியும் மிகவும் தேவையுடைய 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நிகழ்வானது பூநொச்சிமுனை முருகன் கோவிலின் தலைவர் திருவாளர் அருணாகரன் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கொவிட் 19 காரணமாக மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் இவ்வாறான உதவிகளை சாதி, மதம் பாராது வழங்குவது தொடர்பில் தாங்கள் இத்தருணத்தில் நன்றி தெரிவிப்பதாக பயனாளிகள் தெரிவித்தனர்.

மேற்படி நிகழ்வானது சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி இடம்பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.









# திருணமலை போது வைத்தியசாலைக்கு பி.சி.ஆர். இயந்திரம் வழங்கி வைப்பு

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பீசீஆர் இயந்திரம் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வினால் திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் ஜகத்திடம் கையளிக்கப்பட்டது.

People's Leasing கம்பெனியின் நிதி உதவியுடன் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் அயராத முயற்சியினால் இந்த பீசிஆர் இயந்திரம் பெறப்பட்டுள்ளது

கடந்த மே மாதம் 23ம் திகதி People's Leasing கம்பெனிக்கு விடுத்த



வேண்டுகோளுக்கமைய பிரதமர் மஹிந்த ராஜபக்சவினால் திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர் Dr. ஜகத்திடம் அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ச திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் People's Leasing கம்பெனியின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை பீசீஆர் இயந்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு பாடுபட்ட கிண்ணியா தள வைத்தியசாலை அபிவிருத்தி குழு மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்வதாக திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் தெரிவித்தார்.

# மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவு வழங்கி வைப்பு



நாட்டில் தற்போது துரிதமாக பரவிவரும் கொரோனா வைரஸ் மூன்றாவது அலையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான அரசாங்கத்தினால் கொடுப்பனவு நாடு பூராகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலகத்தினால் பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மிலின் வழிகாட்டலில் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலக பிரிவில் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஊடாக 1798 நபர்களுக்கும், முதியோருக்கான தேசிய செயலகம் ஊடாக 634 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் தேசிய செயலகம் ஊடாக 159 மாற்றுத் திறளானிகளுக்கும் மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவுகள் வீடுகளுக்குச் சென்று வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.நஜீம், கிராம அதிகாரிகள், சமூகசேவை திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கொடுப்பனவினை வழங்கி வைத்தனர்.

இதன்போது பிரதேச செயலக பிரிவிலுள்ள ஒன்பது கிராம அதிகாரிகள் பிரிவிலும் மாதாந்த கொடுப்பனவு பெறும் நபர்களுக்கு இருப்பதாறு இலட்சம் ரூபாய் நிதிகள் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸம்மில் தெரிவித்தார்.

# வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் விசேட கூட்டம்

**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், மக்களை கட்டுப்படுத்த வாழைச்சேனை பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பான விசேட கூட்டமொன்று வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்சய பெரமுன தலைமையில் இடம்பெற்ற இவ் விசேட கூட்டத்தில் வாழைச்சேனை பொலிஸ் பிரிவு உபதேச குழுவினர் மற்றும் சர்வ மதத் தலைவர்கள், வர்த்தக சங்க பிரதிநிதிகள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த பகுதியில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றை கட்



டுப்படுத்த பொதுமக்களின் பூரண ஒத்துழைப்புக்களை வேண்டியே இக் கூட்டம் இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தின் அறிவுறுத்துதல்களை அவசியம் பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தவரும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்று குறித்த கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

# திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு 250 ஆயுர்வேத மூலிகை மருத்துவ பொதிகள் வழங்கி வைப்பு

**(திருக்கோவில் நிருபர்)**

அம்பாரை திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு கொவிட் 19 நோய் தாக்கத்திற்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை வழங்க கூடிய 250 ஆயுர்வேத மூலிகை மருத்துவ தூள் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இவ் பொதிகளை கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் அலியார் முகம்மத் நபீலினால் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்தி



ரனிடம் வழங்கி வைக்கப்பட்டு இருந்தன.

அத்தோடு இவ் ஆயுர்வே மூலிகை மருந்தின் மருத்து நல்மைகள் மற்றும் பாவனை முறைகள் தொடர்பாகவும் ஆயுர்வேத பிராந்திய இணைப்பாளர் அலியார் முகம்மத் நபீலினால் விளக்கங்களும் வழங்கி இருந்தார்.

இவ் ஆயுர்வேத மூலிகை மருத்துவ பொதிகள் வழங்கும் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா கல்முனை அட்டாளைச்சேனை மற்றும் திருக்கோவில் ஆயுர்வேத வைத்தியசாலைகளின் வைத்தியர்களான ஐ.எல்.அப்துல் றைஸ் எம்.பி.எம்.றஜீஸ் ஆர்.கோபிநாத் மற்றும் ரீ.தசபலினி றுசீக்கா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு இருந்தனர்.

# கணவனை இழந்த பெண்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கிவைப்பு

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

நாட்டில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள பயணத்தடை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கணவனை இழந்த பெண்கள் மற்றும் திமைப்பட்ட நிலையில் வாழ்ந்து வரும் ஆண்கள் போன்றவர்களுக்கு நிவாரண உணவுப் பொதிகளை வழங்கிவைக்கும் நிகழ்வு மருதமுனையில் நடைபெற்றது.

ஆண்மீகத் துறையில் அதிக ஈடுபாடு கொண்ட சமூகசேவையாளர் ஓய்வுபெற்ற புகையிரத உத்தியோகத்தர் ஏ.கே.எம்.அன்சார் தனது முயற்சியின் பலாக இவற்றை வழங்கி வருகின்றார்.

வீடுகளுக்குள் முடங்கியுள்ள மக்கள் எதிர்கொள்ளும் வறுமை நிலை தொடர்பாக தனக்கு அறிமுகமான பலரிடமும் இருந்து உதவிகளை பெற்று கடந்த ஒரு வாரகாலமாக இந்தப்பணியை



செய்து வருகின்றார்.

இதன் போது சிறு குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு பால்மா உதவிகள், உணவுப் பொதிகள் என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றன. சமூக மட்டத்தில் பல்வேறு சிவில் அமைப்புக்கள், பள்ளிவாசல் நிருவாகத்தினர் இருக்கின்ற போதிலும் இவரது பணி பாராட்டப்பட வேண்டியது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மருதமுனை பிரதேசத்தை அண்டிய தமிழ் சகோதரர்களுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மடு பெருவிழா காலங்களில் இரு வழி பாதையால் செல்ல அனுமதி

**வாஸ் கூஞ்ஞ**

மடு பெருவிழா காலங்களில் மடு ஆலய வளாகத்துக்குச் செல்லும் ஆறு வழி பாதைகளிலிருந்து இம் முறை இரு வழி பாதைகளால் மட்டுமே சென்றுவருவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் பயணக்கட்டுப்பாடு மற்றும் சுகாதார நடைமுறைக்கு அமைவாக நாம் மருதமடு அன்னையின் ஆடி மாத பெருவிழாவுக்கான ஆய்த்தங்களை மேற்கொள்ளுகின்றபோதும் எதிர்காலத்தில் நிலமை மாற்றம் அடைந்தால் நாம் அதற்கேற்றவாறு தயார் நிலையில் இருப்பது நலம் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 23 ந் திகதியோடு ஆரம்பமாகி ஆடி மாதம் இரண்டாம் திகதி வரை நடைபெற இருக்கும் மருதமடு அன்னையின் பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் இடம்பெற்றது.

புதன் கிழமை (16) மாலை 3 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்பணி.அ.விக்ரர் சோசை அடிகளார், மருதமடு அன்னை ஆலய பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன், மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மடு சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.வி.லெம்பேட், பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராட்ச்சி மற்றும் பொது சுகாதார சௌவிக்கிய அதிகாரிகள், மாந்தை மேற்கு பிரதேச சபை செயலாளர், மின்சாரசபை, குடிநீர் வழங்கல் அதிகாரிகள் ஆகியோர் உட்பட ஒரு சிலர் இவ் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

குடிநீர், மின்சாரம், சுகாதாரம் இவைகள் எந்த நிலையிலம் தயார் நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். என அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டதுக்கு அமைவாக இவைகளுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இவ் விழா காலங்களில் ஆலய வளாகத்துக்குள் முன்பு ஆறு பக்கங்களால் பக்தர்கள் சென்றுவருவதற்கான ஏற்பாடுகள் இருந்தபோதும் இம்முறை இரு வழி பாதையாலேயே சென்றுவருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



# களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை தாதி உத்தியோகஸ்த்தர்கள் ஆர்ப்பாட்டம்

**(ரக்ஸனா)**

களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் கடடையுரியும் தாதிய உத்தியோகஸ்த்தர்கள் நேற்று வியாழக்கிழமை நண்பகல் பதாகைகளை ஏந்தியவாறு வைத்தியசாலைக்கு முன்பாக அரச தாதிய உத்தியோகஸ்தர் சங்கத்தின் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலை கிளையின் தலைவர் தி.வித்தியாபதியின் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி தாதிய உத்தியோகஸ்த்தர்கள் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்படும் அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளில் ஈடுபடாமல் அதிலிருந்து விலகி தமது ஏனைய கடமைகளை மேற்கொண்டு வரும் இந்நிலையில் இதன்போது இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வைத்திய அத்தியட்சகரே! ஏனைய வைத்திசாலைகளுக்கு வழங்கப்படும் விசேட விடுமுறைகளை எமது தாதியர்களுக்கும் வழங்குங்கள், நோயாளர்களுக்குச் செய்யப்படும் சேவைகளுக்கு இடையூறு செய்யாமல் தொடர அனுமதி செய்யுங்கள். தொழிற் சங்கங்களை கேலி செய்யாதே, தாதியர்களை மன உழைச்சலுக்கு உள்ளாக்காதே, தாதியரை அடக்குமுறைக்கு உள்ளாக்காதே, ஊழியர்களிடையே முரண்பாட்டை ஏற்படுத்தாதே, உள்ளிட்ட பல வாசகங்கள் பெறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு தாதியர்கள் இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அரச தாத்திய உத்தியோகஸ்த்தர் சங்கத்தின் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை கிளையின் செயலாளர் ஆ.அகிலன்.

எமது வைத்தியசாலை அத்தியட்சகருக்கு எதிராக எமது தாத்திய உத்தியோகஸ்த்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம். எமது சங்கத்தினால் அண்மைக் காலமாக அகில இலங்க ரீதியில் எமது உரிமைகளையும். தேவைகளையும் பெற்றுக் கொள்வதற்காக பணி பகிஸ்கரிப்பை மேற்கொண்டிருந்தோம். இதற்கு சுகாதார அமைச்சரிடம் இருந்து சிறந்த பதில் கிடைக்கும் வரைக்கும் நாம் பி.சி.ஆர், மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளிலிருந்து நாடு பூராகம் விலகியிருக்கின்றோம். இதனை வைத்துக் கொண்டு எமது வைத்திய அத்தியட்சகர் அவர்கள் எம்மைப் பழிவாங்கும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றார். 120 தாத்திய உத்தியோகஸ்த்தர்கள் கடமையாற்ற வேண்டிய இந்த வைத்தியசாலையில் தற்போது நாங்கள் 55 பேர்தான் கடமையாற்றுகின்றோம். இவ்வாறான நிலையில் எமது கடமை நேரத்தைக் குறைத்து மேலத்திக நேரகக் கடமையை இரத்துச் செய்து மன உழச்சலுக்குத் தள்ளியுள்ளார்.

நாங்கள் 24 மணி நேரமும் கண்விழித்து கடமையாற்றுகின்றோம். எமது வைத்தியசாலையின் அத்திசட்சகரினால் எமக்கு ஏற்படும் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பலமுறை முயன்றபோது அவர் எம்மை அவமரியாதையாக நடாத்தினார். இதனால் பாதிக்கப்படுவது நோயாளிகள்தான். வித்தார்.



# கிண்ணியா தள வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் உள்வாங்குமாறு கிண்ணியா ஷூரா சபை கோரிக்கை

**(அப்துல்சலாம் யாசீம்)**

இலங்கையிலுள்ள மாவட்ட பொது வைத்திய சாலைகள் பலவற்றை மத்திய அரசாங்கம் தமது பொறுப்பில் எடுத்து அதனை அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றது.

இந்நிலையில் கிண்ணியாதளவைத்தியசாலையை மத்திய அரசாங்கத்திற்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை பல வருடங்களாக இப் பிரதேச மக்களினால் முன்வைக்கப்பட்டு மக்கள் போராட்டமாகவும் இதனை முன் வைத்தனர்.

இருந்தபோதிலும் மக்கள் முன் வைத்த கோரிக்கைகளை மத்திய அரசாங்கம் இன்னும் நிறைவேற்றவில்லை எனவும் பிரதேச மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் அதிகமான வெளி நோயாளர்களைக் கொண்ட ஒரு வைத்தியசாலை இதுவாகும்! அதிகமான கர்ப்பிணி தாய்மார்கள் இருக்கின்ற ஒரு பிரதேசம் இந்த கிண்ணியா பிரதேசமாகும்.

இந்த வைத்தியசாலையில் கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மக்கள் மாத்திரமல்லாது திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசம் மற்றும் மூதூர் பிரதேசம் தம்பலகாம் பிரதேசத்தின் ஒரு பகுதியில் இருந்தும் மக்கள் தங்களது சுகாதார தேவைக்காக இந்த வைத்தியசாலையை நாடி இருப்பதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

2017 ஆம் ஆண்டு தள வைத்தியசாலை தரம் ஏ என்னும் தரத்திற்கு இந்த வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்ட போதிலும் இதற்கான பௌதிக வளங்கள் என்பன தொடர்ச்சியாக பற்றாக்குறையாகவே இருந்து வருகின்றது.

மேற்படி நிலைமைகளை கவனத்தில் கொண்டு இந்த வைத்தியசாலையை மத்திய அரசுக்கு உள்ளீர்க்கப்படுமாயின் இந்த மக்களுக்கு சிறந்த சேவையினை வழங்க முடியும் எனவும் கிண்ணியா சூரா சபை தெரிவித்துள்ளது.

எனவே கடந்த காலத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மக்களுடைய தேவைகளை கவனத்தில் கொண்டு கிண்ணியா தள வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்தில் உள்ளீர்க்குமாறு கிண்ணியா சூரா சபை சுகாதார அமைச்சரிடமும், சுகாதார அமைச்சிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

# சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு ஊக்குவிப்பு அன்பளிப்பு பொருட்கள் வழங்கி வைப்பு



**(யாக்கூப் பஹாத்)**

நிந்தவூர் தூய கரங்கள் சமூக சேவை அமைப்பினரால் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியால ஊழியர்களுக்கான ஊக்குவிப்பு அன்பளிப்பு பொருட்கள் அன்று நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய கேட்போர் கூடத்தில் வைத்துவழங்கி வைக்கப்பட்டது.

கொரோனா நோய் பரவலினை நிந்தவூர் பிரதேசத்தில் கட்டுப்படுத்துவதற்காக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி Dr.(Ms) பறுசா நக்பர் தலைமையிலான சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அனைத்து ஊழியர்களினதும் அர்ப்பணிப்புடனான சேவைகளை பாராட்டி அவர்களை ஊக்குவிக்கும் முகமாக நிந்தவூர் தூய கரங்கள் சமூக சேவை அமைப்பினரால் அன்பளிப்பு பொருட்கள் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நிந்தவூர் தூய கரங்கள் சமூக சேவை அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி Dr.(Ms) பறுசா நக்பர், மற்றும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி காரியால அனைத்து உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்து கொண்டனர்

# முறையான அனுமதிப் பத்திரமின்றி வீதிகளில் பயணிப்போர் மீது சட்ட நடவடிக்கை

**(எம்.ஏ.றமீஸ்)**

கொவிட் தொற்றின் ஆபத்தான நிலைமையினை நோக்கி கல்முனைப் பிராந்தியம் சென்று கொண்டிருக்கின்றது. கடந்த 24 மணி நேரத்தினுள் இப்பிராந்தியத்தில் 39 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, இரு மரணங்களும் பதிவாகியுள்ளது.

இக்கால கட்டத்தில் முறையான அனுமதிப் பத்திரமற்று வீதிகளில் உலாவுவோர் மீது பாரபட்சமற்ற சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

இக்கால கட்டத்தில் மக்கள் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும். தவறும் பட்சத்தில் அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும்.

நிந்தவூர் பிரதேசத்தில் இருவர் கொவிட் தொற்றின் காரணமாக கடந்த 24 மணி நேரத்தினுள் மரணமடைந்துள்ளனர். இவ்விரு மரணங்களும் கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நிகழ்ந்துள்ளது.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாவிதன்வெளி பிரதேசத்தில் 10 தொற்றாளர்களும், காரைதீவு பிரதேசத்தில் அறுவரும், இறக்காமம் பிரதேசத்தில் நால்வரும், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மூவரும், நிந்தவூர் பிரதேசத்தில் இருவரும், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவரும் என இப்பிராந்தியத்தில் 39 தொற்றாளர்கள் 24 மணி நேரத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள கொவிட் தொற்றாளர்களை பராமரிக்கும் பாலமுனை பிரதேச வைத்



தியசாலையில் 67 நோயாளர்களும், மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் நூறு நோயார்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். கடந்த 24 மணி நேரத்தில் இவ்விரு சிகிச்சை நிலையங்களுக்கும் 19 நோயாளர்கள் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை, அக்கரைப்பற்று நுரைச்சோலை தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் 1109 பேரும், அட்டாளைச்சேனை மத்திய நிலையத்தில் 90 பேரும், ஒலுவில் தனிமைப் படுத்தல் மத்திய நிலையத்தில் 44 பேரும் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப் பட்டு வருகின்றனர்.

கல்முனைப் பிராந்தியத்தில் அதிவேகமாக கொவிட் தொற்று பரவி வருவதனால் இப்பிராந்தியத்தில் மிக இறுக்கமான சுகாதார நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. முறையான அனுமதிப் பத்திரமற்று வீதிகளில் உலாவி வருபவர்கள் மீது பாரபட்சமற்ற சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பொது மக்கள் நிலைமையினைக் கருத்திற் கொண்டு தாமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கொவிட் தொற்றிலிருந்து கல்முனைப் பிராந்தியத்தினை மாற்றியமைக்க முன்வர வேண்டுமெனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் மேலும் தெரிவித்தார்.

# மூதூர் நாவலடி கிராம மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள நாவலடி கிராம மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போதைய நாட்டின் அசாதாரண சூழ் நிலை காரணமாக கடல் தொழில் பாதிப்பு மற்றும் மண்ணெண்ணெய் விலை ஏற்றம் காரணமாகவும் இயந்திரப் படகு மூலமான தொழில் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

சுமார் நூறு குடும்பத்துக்கும் மேலாக மீனவர்கள் வசித்து வரும் இக் கிராமத்தில் கடல் தொழிலை நம்பியே தங்களது அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர்.

கடலில் மீன் பிடிபடுவது குறைவு மீன்களுக்கான விலை கிடைக்காமை போன்ற பல்வேறு அசொகரியங்களை தற்கால கொரோனா காரணமான பயணத் தடை என பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே தான் தங்களுக்கு வாழ்வாதார நிவாரணங்களை வழங்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆலையடிவேம்பு பிரதேசத்தில் புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்போடு தொடரும் நிவாரணப்பணி

**(வி.சுகிர்தகுமார்)**

கொவிட்19 மூன்றாம் அலை காரணத்தினால் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட வருமானம் குறைந்த முதியோர்கள் மற்றும் வருமானம் குறைந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கண்ணகி கிராமம் பனங்காடு நாவற்காடு சின்னமுகத்துவாரம் கோளாவில் 01 உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கே உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டது.

புலம்பெயர்உறவுகள் மற்றும் உள்ளூர் உறவுகள் அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களின்நிதியீட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களே இன்று ஆலையடிவேம்பு பிரதேச சமூகநலன் அமைப்பினரின் உதவியுடன் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பங்களிப்புடன் இப்



பொதிகள்மக்கள் காலடிக்கு கொண்டு சென்று வழங்கி வைக்கப்பட்டன.

இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட 1600 ரூபா பெறுமதியான 330 பொதிகள் இதுவரை பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டதுடன் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய கிராமங்கள்ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் முதற்கட்டமாக வழங்கப்பட்டன. இந்நிலையில்நிவாரணப் பொருட்களை பிரதேச செயலாளர் வி.பபாகரனின் ஆலோசனையும் பிரகாரம் முற்றிலும்சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற நிவாரணம் வழங்கும் பணியில் ஆலையடிவேம்பு பிரதேசசமூக நலன் அமைப்பினர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பட்டதாரிபயிலுனர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டதுடன் பொதுமக்களின் வீடுகளுக்கு கொண்டு சென்றும்கையளித்தனர்.

இதேநேரம் தொடர்ந்தும் இப்பணி முன்னெடுக்கப்படும் நிலையில் பயணத்தடை காரணமாக பொதுமக்கள்பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதிகளவான மக்கள் நிவாரணத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றமைகுறிப்பிடத்தக்கது.

# கந்தளாய் வைத்தியசாலைக்கு கட்டில்கள் வழங்கி வைப்பு



**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை கந்தளாய் வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவிற்கு தேவையான வைத்திய உபகரணங்கள்வழங்கி வைக்கப்பட்டது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரலவின் வேண்டுகோளுக்கிணங்க பொதுஜன பெரமுன இன்ஜினியரு அமைப்பினால் இப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இதன்போது கோமரங்கடவல பிரதேச சபை தவிசாளர் சந்தன விஜித குமார் வினால் கந்தளாய் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் டி.ஜீ.எம்.கொஸ்தாவிடம் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

# கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள் கபிலர் சமுதாய மேம்பாட்டு பேரவையினருடன் பேச்சு



நாடளாவிய ரீதியில் அதிகரித்து கொண்டு வரும் கொரோனா தொற்று காரணமான பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் முடக்கப்பட்டு இருப்பதனை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யும் முகமாக கபிலர் சமூதாய மேம்பாட்டுப் பேரவையானது நிகழ்நிலை (Online) மூலமான இலவச மெய்நிகர் வகுப்புக்களை தரம் 3 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கும் மற்றும் சகல அரச போட்டிப் பரீட்சைக்குமான மொழித்திறன் மற்றும் நுண்ணறிவு வகுப்புக்களை நடத்தி வருகின்றது.

இச் செயற்பாட்டினை மேலும் ஊக்கப்படுத்தும் முகமாக கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் திரு M.C.L பெனான்டோ மற்றும் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் கபிலர் சமூதாய மேம்பாட்டு நிறுவனத்தின் அலுவலகத்திற்கு நேரடியான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இவ் விஜயத்தில் அந் நிறுவனத்தின் கல்விசார் செயற்பாடுகளை நேரடியாக அவதானித்தது மட்டுமின்றி கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக மேலும் பல ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் க.பொ.த உயர்தர கணிதரு விஞ்ஞான பிரிவு மாணவர்களின் அடைவு மட்டத்தினை அதிகரிப்பதற்கான விசேட மெய்நிகர் (Zoom) வகுப்புக்களை நடாத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் சிரேஸ்ட உதவிச் செயலாளர் திரு.ஓ.சித்திரவேல்ரு உதவிச் செயலாளர் திரு.A.G.பஷால்ரு பிரதி கல்விப் பணிப்பாளர் திரு.கு.சுதர்சன் மற்றும் திருகோணமலை கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.கு.சிறிதரன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட கிராம மக்களுக்கு உலர் உணவு விநியோகம்

**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக முடக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட கிராம மக்களுக்கு உலர் உணவு விநியோகம் இடம்பெற்று வருவதாக பிரதேச செயலாளர் வி. தவராஜா தெரிவித்தார்.

முடக்கப்பட்டுள்ள கிராம மக்களின் வீடுகளுக்குச் சென்று நிவாரணப் பொதிகளை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு மட்டக்களப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான நஸீர் அஹமட் தலைமையில் புதன்கிழமை 16.06.2021 ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் வரும் மீராவோடை கிழக்கு மீராவோடை மேற்கு மாஞ்சோலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3200 பயனாளிக் குடும்பங்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொதிகள் விநியோகம் இடம்பெற்று வருகிறது.

வாரத்திற்கு ஒரு பொதி என்ற அடிப்படையில் மொத்தமாக இரு வாரங்களுக்கு இந்தப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் தவராஜா மேலும் தெரிவித்தார்.

# கொவிட்19 விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்டும் நடவடிக்கை

**(ஹஸ்பர் ஏ ஹலீம்)**

கொரோனாவில் இருந்து பாதுகாப்பு பெற விழிப்புணர்வு சுவரொட்டி ஸ்டிக்கர்களை ஒட்டும் நடவடிக்கை இலங்கை செஞ்சிலுவை சங்க திருகோணமலை கிளையினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் ஒன்று கூடும் இடங்கள் தனியார் வங்கிகள் அரச திணைக்கள பகுதிகள் ஊடாக செஞ்சிலுவை சங்க தொண்டர் குழுவினர்களால் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் திருகோணமலை நகர் பகுதியில் இடம் பெற்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்கள்,தனியார் வங்கிகள் உள்ளிட்ட பல இடங்களில் கொவிட்19 விழிப்புணர்வு அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# காரைதீவு, தம்பிலுவில் தேசிய பாடசாலைகளில் அதிபர்கள் கடமையேற்பு!



(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு விபுலாநந்த மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் அதிபராக மயில்வாகனம் சுந்தரராஜன் கடமையேற்றார்.

அதேவேளை தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) 15 வது புதிய அதிபராக பாலசுந்தரம் சந்திரேஸ்வரன் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந் நிகழ்வுகள் கல்முனை வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் மற்றும் திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் வை.ஜெயச்சந்திரனின் முன்னிலையில் கொவிட் 19 சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்றன.

நிகழ்வில் முன்னாள் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரி அதிபராகவிருந்த பாலசுந்தரம் சந்திரேஸ்வரன் (பாபு) 03 06 2021ந் திகதியில் இருந்து தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தின் (தேசிய பாடசாலை) புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவ் நியமனமானது தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை தெரிவு செய்ய நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவின் அடிப்படையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் இவ் அதிபர் நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் அவரது இடத்திற்கு பிரதிஅதிபராகவிருந்த ம.சுந்தரராஜன் பதில் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சபீஸின் "அயலவருக்கு உதவுவோம்" திட்டத்தின் ஆரம்ப கட்ட உதவி

(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் வேகமாக பரவிவரும் கொரோனா அலையை கட்டுப்படுத்த அரசினால் முன்மொழியப்பட்டிருக்கும் பயணத்தடை காரணமாக அன்றாட வாழ்வாதாரத்தை இழந்த அம்பாறை மாவட்ட மக்களின் பசி போக்கும் தன்மையை கவனத்தில் கொண்டு அக்கரைப்பற்று மாநகர சபை உறுப்பினரும் அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவருமான எஸ்.எம். சபீஸ் அவர்களினால் முன் வைக்கப்பட்ட "அயலவருக்கு உதவுவோம்" திட்டத்தின் ஆரம்ப கட்ட உதவிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ் தலைமையிலான "அயலவருக்கு உதவுவோம்" திட்டத்தின் செயற்பாட்டாளர்கள் பயணத்தடை காரணமாக தொழிலை இழந்த, வருமானமில்லாத, கஷ்டப்படும் அம்பாறை மாவட்ட கல்முனை பிரதேச மக்களுக்கு இந்த



உதவிகளை இன்று வழங்கிவைத்தனர். இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவர் எஸ்.எம். சபீஸ் இந்த வேலைத்திட்டத்தை இனிவரும் காலங்களில் அம்பாறை மாவட்ட சகல தமிழ், முஸ்லிம் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்க உள்ளதாக தெரிவித்ததுடன் இந்த பசி போக்கும் தூய பணிக்கு உதவ விரும்பும் நல்லுள்ளங்கள் தாமாக முன்வந்து இணைத்துக்கொள்ள முடியும் என்றார்.

# இலங்கை வாழ் சிங்கள மக்கள் சீனாவுக்கு எதிராக போராடவேண்டிய காலம் இனி வரும்

## - சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ்



(பாறுக் ஷிஹான்)

இலங்கை அரசு கொழும்பில் சீன ஈழத்தை (துறைமுக நகரம்) வழங்கியுள்ளது. இதனால் இலங்கை வாழ் சிங்கள மக்கள் சீனாவுக்கு எதிராக போராடவேண்டிய காலம் இனி வரும்.இனி மேல் தான் இதன் விளைவை இலங்கை அரசு அனுபவிக்கும் என, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

அம்பாறை ஊடக அமையத்தில் நேற்றிரவு (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு கருத்து வெளியிட்ட அவர், நான்காம் கட்டமாக எங்களின் நிவாரணப்பணி அம்பாறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.மேலும் யாழிலிருந்து மலையகத்தை நோக்கி சென்ற எங்களின் நிவாரணப்பணியின் போது இருந்த சோதனை சாவடிகளுக்கும், மலையகத்திலிருந்து அம்பாறைக்கு வரும் போது இருந்த சோதனை சாவடிகளுக்கும், நிறையவே வித்தியாசம் இருந்தது.

அம்பாறை மாவட்டத்தில் நாங்கள் அறிந்த வரை நிறைய சோதனைசாவடிகள் இருக்கிறது. எங்களின் பயணங்களின் போது நாங்கள் வெளிநாட்டு பயணிகள் சுதந்திரமாக வீதிகளில் உலாவித்திரிவதையும், பணக்காரர்கள் நட்சத்திர விடுதிகளில் மகிழ்வுடன் இருப்பதையும் கண்டோம்.

இந்த பயணத்தடையில் அப்பாவி மக்கள் கடுமையாக வதைக்கப்படுகிறார்கள். எவ்வித முறையான நிவாரணங்களும் வழங்கப்படாமல் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளார்கள். இது முட்டாள்தனமாக உள்ளது. கொரோனாவிலிருந்து தப்பினாலும் பசியினால் தற்கொலை செய்யும் நிலையே இன்று உருவாகி வருகிறது.

மேலும் அரசினால் வழங்கப்பட்ட 5000 ரூபாய் உதவித்தொகை தகுதியானவர்களில் 10 வீதமானவர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதியுள்ள 90 சதவீதமானவர்களின் நிலை என்ன? யாரும் பசியுடன் இருக்க கூடாது என்பதற்காக நாங்கள் வீதிக்கு இறங்கி களப்பணி செய்கிறோம்.

இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுமே கொண்ட நாங்கள் செய்ததை காட்டிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு 05 மடங்கு செய்திருக்க வேண்டும். செய்தார்களா? இல்லை அரசுடன் இருக்கும் டக்ளஸ், அங்கஜன்,பிள்ளையான், வியாழேந்திரன் என யாராக இருந்தாலும் இவர்கள் தமிழ் மக்களுக்கு செய்த உதவிகள் தான் என்ன? இவர்கள் அமைச்சர்களாக இருந்து இராஜாங்க அமைச்சர்களாக இருந்து தமிழர்களுக்காக சாதித்தது என்ன? குறைந்தது மக்களின் பசியையாவது போக்கினார்களா?

சுகாதார துறை பற்றிய பூரண அறிவு எனக்கு இல்லாது போனாலும் பகுத்தறிவின் படி கொரோனா தொற்று உயிரிழப்பு அறிக்கைகளில் மிகைப்படுத்தல்கள் உள்ளதை உணர முடிகிறது.

அது மட்டுமின்றி கொரோனா அறிக்கைகளிலும் குழப்பநிலை இருக்கிறது.பெறுமதியான தமது உயிர்களை காப்பாற்றி கொள்ள எல்லோரும் சுகாதார வழிமுறைகளை பேணி நடக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

# அட்டாளைச்சேனையில் பி.சி.ஆர் பரிசோதனை

(றியாஸ் இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். அகிலன் தலைமையிலான குழுவினர் நேற்று (17) காலை முதல் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய காரியாலய முன்பாக பிரதான வீதிகளில் பயணம் செய்த (அக்கரைப்பற்று - கல்முனை) வாகனங்களை பரிசோதனை செய்து உரிய அனுமதிப்பத்திரம் இன்றி பயணித்தவர்களுக்கு பி.சி ஆர் மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயப் பிரிவிற்குட்பட்ட ஒலுவில்,பாலமுனை மற்றும் அட்டாளைச்சேனைப் பிரதேசங்களில் நேற்று முன்தினம் (16) 12 பேர் கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர்.

இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு அட்டாளைச்சேனை சுகாதாரப்பிரிவில் கொரோனா



தொற்று தீவீரமடைவதை தொடர்ந்து அதனை முழுமையாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் அதிரடி நடவடிக்கைகள் இதன்போது அட்டாளைச்சேனை சுகாதார பிரிவில் முழுவதுமாக நடைபெற்றது.

இத் திடீர் கண்காணிப்பு நடவடிக்கையில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதம பொது சுகாதார பரிசோதகர் ஈ.றீ.சலீம், அட்டாளைச் சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எல். அமானுல்லா,பொது சுகாதார பரிசோதகர்கள், உத்தியோகத்தர்கள், ஊமியர்கள் , அக்கரைப்பற்று பொலிஸ் மற்றும் இராணுவத் தினரும் இதில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்கினர்.

இதன்போது அனுமதி இன்றி பயணித்த ஒருவருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது அவர் கொரோனா தொற்றாளாக அடையாளப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் நிவாரணப்பணி



(நூருல் ஹுதா உமர்)

நாட்டில் வேகமாக பரவிவரும் கொரோனா அலையை கட்டுப்படுத்த அரசினால் முன்மொழியப்பட்டிருக்கும் பயணத்தடை காரணமாக அன்றாட வாழ்வாதாரத்தை இழந்த வசதிகுறைந்த பொதுமக்களுக்கு அரிசி பக்கட்டுக்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (17) மாலை சாய்ந்தமருது மருதம் கலைக்கூடலின் ஏற்பாட்டில் அமைப்பின் தலைவர் கலைஞர் அஸ்வான் சக்காப் மௌலானாவின் தலைமையில் சாய்ந்தமருதில் நடைபெற்றது.

ஐக்கிய (உலமா) காங்கிரசின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிவாரணம் வழங்கும் நிகழ்வில் ஐக்கிய காங்கிரசின் தலைவர் மௌலவி முபாரக் அப்துல் மஜீத், பொதுச்செயலாளர் ஸாஹித் முபாரக் உட்பட சாய்ந்தமருது மருதம் கலைக்கூடலின் நிர்வாகத்தினர் பலரும் கலந்து கொண்டு இந்நிவாரண உதவிகளை வழங்கி வைத்தனர்.

சுமார் 25 குடும்பமளவில் இவ்வுதவியில் பயன்பெற்றனர்.